செய்தி வெளியீடு எண். 111 நாள் 20.02.2017

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைகினங்க திருவள்ளுர் மாவட்டம், எர்ணாவூர் சுனாமி குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் திரு.பழனி-திருமதி. கலாராணி ஆகியோரது மகள் குழந்தை ரித்திகா உயிரிழந்ததை தொடர்ந்து மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்கள் ஆறுதல் கூறி மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய். மூன்று இலட்சத்திற்க்கான காசோலையினை வழங்கினார்.**

~~~~~~~

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க திருவள்ளுர் மாவட்டம், திருவெற்றியூர் வட்டம் எர்ணாவூர் சுனாமி குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் திரு.பழனி-திருமதி. கலாராணி ஆகியோரது மகள் குழந்தை ரித்திகா உயிரிழந்ததை தொடர்ந்து மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்கள் இன்று (20.02.2017) நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் மூன்று இலட்சத்திற்க்கான காசோலையினை வழங்கினார்.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது ‘‘குழந்தையின் உயிரிழப்பு மிகவும் வருத்தமளிப்பதாக உள்ளது. இது மிகவும் கண்டிதக்க கூடியதாக உள்ளது. இது தொடர்பாக சட்டப்படி நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட்டு, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும். தமிழ்நாடு குழந்தைகளுக்கு மிகவும் பாதுகாப்பான மாநிலமாக திகழ்கிறது. மேலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க பொற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மிகவும் கவனமுடன் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக பெண் குழந்தைகளின் பொற்றோர்கள் மிகந்த கவனத்துடன் கண்காணிக்க வேண்டும். மேலும் இப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராயப்படும்’’ என கூறினார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப.,அவர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்**
~~~~~~~